***DEPOSITION OF WITNESS***

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***

***CC.No.181/2015 – P.W. 2 (LW4)***

| | |
|---|---|
| *Name* | சிவராமன் |
| *Father/Husband's Name* | கலியபெருமாள் |
| *Village* | ரிஷியூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *49* |

**எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 27.06.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நன்னிலம் தாலுக்கா அலுவலகத்தில் துணை வட்டாச்சிரியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும்.

நீதிமனறத்தில் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையொப்பபம் அசா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 03.03.2014 ல் இருந்து 15.06.2016 வரை மன்னார்குடி சரக வருவாய் ஆய்வாளராக பணியாற்றி வந்தேன். கடந்த 12.07.2015 ம் தேதி இரவு 12.00 மணியளவில் அந்த சமயத்தில் இருந்த தாசில்தாரிடமிருந்து எனக்கு தொலைபேசி அலைப்பு வந்தது. அதில் ரோடு ரோந்து பணியில் உள்ள காவல் நிலையத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்ததாகவும், ஒரு வழக்கில் கைப்பற்றுதல் மகசரில் சாட்சியாக இருக்குமாறும், அங்கு செல்லுமாறும் எனக்கு வாய்மொழி உத்தரவு வழங்கினார். நான் இரவு 01.00 மணியளவில் மன்னார்குடி நகர காவல் நிலையத்திற்கு சென்றேன். காவல் நிலையத்தில் இருந்த இரண்டாவது எதிரியிடமிருந்து எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றனர். அதில் 2 வது எதிரி தான் சாமி தியேட்டர் அருகே இன்ஸ்டா என்ற DTP computer center

வைத்திருப்பதாகவும், இம்ரான்கான் என்பவர் பாஸ்போர்ட் எடுப்பதற்காக பள்ளி சான்றிதழ் தயார் செய்து தர கூறியதாகவும், தயார் செய்து கொடுத்ததாகவும் தன்னுடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறினார். என்னுடன் எழிலரசன் என்ற கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தார். மேலும், அன்றைய இரவே 01.30 ல் இருந்து 03.00 மணிக்குள் என்னையும், எழிலரசன் என்பவரையும் ஆஜர் எதிரிகளையும் போலீசார் இன்ஸ்டா என்ற DTP computer center அந்த இடத்திற்கு அழைத்து சென்று எங்கள் முன்னிலையில் அங்கிருந்த Computer, Printer மற்றும் அங்கிருந்த ஆவணங்களை கைப்பற்றினர். கைப்பற்றுதல் மகசரிலும் நானும், எழிலரசனும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். **மேற்படி எங்கள் முன்னிலையில கைப்பற்றப்பட்ட வழக்கின் தடயப்பொருட்களுக்கான கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும், அங்கிருந்து கைப்பற்றிய ரப்பர் ஸ்டாம்ப் எங்கள் முன்னிலையில போலீசார் வெள்ளை தாளில் அச்சிட்டு பார்த்தில் அதில் ஆலங்கோட்டை மேல்நிலை பள்ளியின் பெயரில் ரப்பர் ஸ்டாம்ப் இருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மன்னார்குடி நகரத்திற்கு என்று கிராம நிர்வாக அலுவலர் என்று உண்டு. அவருக்கு உதவியாளரும் உண்டு என்றால் சரிதான். அந்த நேரத்தில் மன்னார்குடி கிராம நிர்வாக அலுவலர் பணி பொறுப்பில் ( incharge) இல்லை என்றால் சரிதான். சாதாரணமாக வட்டாட்சியர் நிலைக்கு குறையாத மேல்அதிகாரியின் எழுத்துபூர்வ உத்தரவின் பேரிலோ அல்லது சம்மன் மூலமாகவோ, விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் அந்த நடைமுறை பின்பற்றபடவில்லை. முதல் விசாரணையில் நான் சொன்ன தாசில்தார் எனக்கு போன் மூலம் தகவல் சொல்லி அதனடிப்படையில் காவல் நிலையத்திற்கு சொன்னதாக சென்ற விபரத்தை போலீசார் விசாரணையின் போது சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. Computer, Printer, ஆவணங்கள் கைப்பற்றபட்டதாக சொல்லும் விபரங்கள் போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேலும், அங்கிருந்து கைப்பற்றிய ரப்பர் ஸ்டாம்ப் எங்கள் முன்னிலையில போலீசார் வெள்ளை தாளில் அச்சிட்டு பார்த்தில் அதில் ஆலங்கோட்டை மேல்நிலை பள்ளியின் பெயரில் ரப்பர் ஸ்டாம்ப் இருந்தது என்று சொல்லியுள்ள விபரங்களை போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா

என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு பற்றியும், வழக்கினுடைய எதிரியின் விபரங்களை போலீசார் சொல்லியதன் பேரில் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நானும், எழிலரசன் அசா.ஆ.2 போலீசார் தயார் செய்து வைத்திருந்த ஆவணத்தில் கையெழுத்து போட்டோம் என்றால் ஆமாம். சாட்சியிடம் நீதிமன்றம், ஏற்கெனவே தயார் செய்த ஆவணத்தில் தான் கையெழுத்து செய்தீர்களா என்று கேட்டதற்கு இல்லை என்றும், நாங்கள் சென்ற பிறகு தான் 2 வது எதிரி வாக்குமூலம் கொடுத்தார். அதில் தான் கையொழுத்து போட்டோம் என்று கூறுகிறார். நான் சொன்ன விதத்தில் எதிரி வாக்குமூலம் கொடுத்தாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விசாரணைக்கு ஒத்துழைப்பு செய்யும் வகையில் இந்த வழக்கில் தொடர்புடைய ஆவணங்களின் நகலை ஒரு பிரதி மேலதிகாரிக்கு அனுப்பி அதனடிப்படையில் கோப்புகள் பராமரிக்கப்பட்டு அந்த கோப்புகளை மேலதிகாரிகளின் சான்றை பெற்று அடிப்படையில் சமூக நீதிமனற்த்தில் சாட்சியம் அளிக்க வரும்போது எடுத்து வர வேண்டும் என்று விபரம் எனக்கு தெரியுமா என்றால் அந்த மாதிரி கோப்புகள் பராமரிக்க வேண்டும் என்றும், சான்று பெறவேண்டும் என்றும், வருவாய் நிலையாணையில் இல்லை. ஆனால் நான் சென்றதற்கு மேலதிகாரியிடம் தகவல் தெரிவித்து இருக்கிறேன். மேலே கண்ட நடைமுறை பின்பற்றபட வேண்டும் என்று வருவாய் நிலையாணயையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் இல்லை. இந்த வழக்கை பொறுத்தவரைக்கு நான் முதல் விசாரணையில் நான் சொல்லப்பட்ட நாளில் தான் என்னை போலீசார் விசாரித்தார்கள். அதற்கு பின்னர் போலீசார் விசாரித்தார்களா என்றால் ஞாபகம் இல்லை. RK பாளையம் ரோடு சுமார் 1 1/2 கி.மீ அளவு சுற்றளவு கொண்ட இடம் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன பெயரில் உள்ள center குறிப்பாக எந்த இடத்தில் அமைந்துள்ளது என்றால் சாமி தியேட்டர் எதிரில். இந்த விபரத்தை போலீசார் விசாரித்தபோது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் RK பாளையம் ரோடு என்ற இடத்தில் DTP center இல்லை என்று சொன்னால் சரியல்ல. சாமி தியேட்டர் என்பது கீழ் மேல் சாலைக்கு தென்புறத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடத்தில் நிறைய கடைகளும், வர்ததக நிறுவனங்களும், வீடுகளும் உள்ள பகுதி என்றால் சரிதான். RK பாளையம் ரோட்டில் 2 வது எதிரியிடமிருந்து கைப்பற்றபட்டதாக சொல்லும் கடை எந்த தளத்தில் உள்ளது என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் கீழ்

தளத்தில் உள்ளது. குறிப்பாக எந்த வகையான பொருட்கள், பிராண்ட் மற்றும் கலர் உள்ள பொருட்கள் கைப்பற்றபட்டது என்னால் சொல்லமுடியுமா என்றால் பொருட்கள் பற்றி சொல்ல முடியும், பிராண்ட் மற்றும் கலர் பற்றி சொல்லமுடியாது. ஞாபகம் இல்லை. என்ன என்ன பொருட்கள் கைப்பற்றபட்டது என்ற விபரம் எனக்கு போலீஸ் சொன்னதன் அடிப்படையில் எனக்கு தெரியும் என்றால் நானும், அங்கியிருந்தேன். ஆவணம் கைப்பற்றபட்டது என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சொன்ன நேரததில் சொன்ன விதத்தில் எந்த வாக்குமூலம் கொடுக்கபடவில்லை, எந்த பொருடகளும் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக என்னையும், எழிலரசனையும் காவல் நிலையத்திற்கு போலீசார் விசாரணைக்கு சென்றபோது அங்கு வைத்து தான் கையொப்பம் செய்தீர்களா என்றால் ஆமாம். நீதிமன்றம் மறுபடியும் சாட்சியிடம் எந்த எந்த ஆவணத்தில் எங்கு வைத்து கையெழுத்து செய்தீர்கள் என்று கேட்டபோது வாக்குமூலத்தில் போலீஸ் ஸ்டேஷனிலும், மகசரில் அந்த கடையில் வைத்து கையொப்பம் செய்தேன். அசா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்கள் காவல் நிலையத்திலே வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும், அதிலே தான் கையொப்பம் செயதேன் என்றாலும் வழக்கிற்க்காக முன்னுக்கு பின் முரணாக மாற்றி மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரஊண</u>

1வது எதிரி 2 வது எதிரியின் குறுக்கு விசாரணையை அனுசரிக்கிறார்.

Sd/---J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.